# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

## தேசிய சேதன கட்டுப்பாட்டு பிரிவு (தேசேகபி)

## அபிவிருத்தி திறமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு

# பதவி வெற்றிடங்கள்

தேசிய சேதன கட்டுப்பாட்டு பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக சபையின் சேவையுடன் இணைவதற்காக நிரூபிக்கப்பட்ட தகைமை மற்றும் தொழில்சார் திறன்களுடனான தேர்ச்சி மற்றும் திறமாக சிந்தித்து செயலாற்றக் கூடிய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை அழைக்கின்றது.

## 1) பணிப்பாளர் பதவி (எச்எம் 1-1)

**தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயத்தில் அல்லது தொடர்புடைய துறையில் பட்டமொன்று விருப்பத்திற்குரியது

**அத்துடன்**

உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப்பட்ட (முதுமாணி) அல்லது பதவியின் விடயபரப்பிற்குரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவக கூட்டிணைந்த அங்கத்துவம்.

**மற்றும்**

அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம் (எச்எம் 1-1)**

மாதாந்தம் ரூ. 81,670/- 15x2270 - 115,720, 02/2016 இலக்கமுடைய முசேதி சுற்றறிக்கையின் IIஆம் இணைப்பிலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் சம்பளங்கள் வழங்கப்படும்.

அரசாங்க ஒழுங்கு விதிகளுக்கமைவாக உத்தியோக பூர்வ பாவனைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட பிரத்தியேக பாவனைக்குமாக வாகனமொன்று வழங்கப்படும்.

**வயது:**

35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். இருப்பினும், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் உள்ளக அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 2) உதவிப் பணிப்பாளர் (தர முகாமைத்துவம்) பதவி எம்எம் 1-1

## 3) உதவிப் பணிப்பாளர் (இணைப்பு/ ஒருங்கிணைத்தல்) எம்எம் 1-1

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயத்தில் பட்டதாரி பட்டம் அல்லது நிகரான துறையில் பெறப்பட்டதும் சேதன விவசாய துறையில் விரும்பத்தக்கதாக விவசாயம்/ தர முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருட அனுபவம் மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்வாய்ந்த தனியார் துறை நிறுவனமொன்றில் சிறந்த முகாமைத்துவ அனுபவம்

**சம்பள அளவுத்திட்டம் (எம்எம் 1-1)**

ரூ. 53,175/- - 10x1,375 - 15x1910 - 95,575/- 02/2016 என்ற இலக்கமுடைய முசேதி சுற்றறிக்கையின் IIஆம் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பணிப்புரைகளுக்கமைவாக சம்பளங்கள் வழங்கப்படும்.

**வயது: (எம்எம் 1-1)**

22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். இருப்பினும் மேல் வயதெல்லை அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் உள்ளக அபேட்சகர்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டாது.

**வேலை விளக்கங்கள்:**

வேலை விளக்கம் மற்றும் மேலதிக விபரங்களுக்காக www.srilankabusiness.com என்ற ஏஅச இன் இணைய தளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**ஏனைய நன்மைகள்:**

- ஊழியர் மற்றும் அவரது நெருங்கிய குடும்பத்தவருக்கு வைத்தியசாலை மற்றும் வெளியக மருத்துவ செலவினங்களை பூர்த்தி செய்வதற்கான கவர்ச்சிகரமான மருத்துவ உதவித்திட்டம்.
- இலகு வட்டி விகிதத்தில் அனர்த்த கடன் திட்டம்
- இலகு வட்டி விகிதத்தில் கவர்ச்சிகரமான வீடமைப்புத் துறை கடன் திட்டம்
- வருடாந்த மிகையூதியம்
- பாவிக்கப்படாத மருத்துவ லீவிற்கான பண மீள் நிரப்பல்
- தெரிவு செய்யப்பட்ட பஸ் வழிகளுக்கான போக்குவரத்து வசதி/ போக்குவரத்துப்படி

**விண்ணப்பிக்கும் முறைமை**

ஏஅச, 5ஆம் மாடியின் மவமு பிரிவில் வைக்கப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவம் அல்லது www.silankabusiness.com என்ற இணையத்தளத்தில் "Announcements" என்ற தலைப்பின் கீழுள்ள படிவத்திலேயே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2016 டிசெம்பர் 07ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரித்தான அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் ''தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர், ஏஅச இற்கு ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். பதவிப் பெயர் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசதுறை ஊழியரின் விண்ணப்பங்கள் அவர்தம் நிறுவன தலைமைகளுக்கூடாகவே அனுப்பப்படல் வேண்டும். மூடும் திகதிக்கு முன்னராக விண்ணப்பப்படிவத்தின் முன் பிரதியொன்றை ஏஅச ஐ அடையும் வகையில் அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் மதியுரை வழங்கப்படுகின்றனர்.


தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்றலுவலர்,

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**

தேஅச - ஏஅச கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு-02.

தொலைபேசி: 011-2300705-11, தொலைநகல்: 011-2300715

இணையம்: www.srilankabusiness.com


09.11.2016